

# பீல் பிராந்தியச் சமூகத்தினரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான திட்டத்தின் சுருக்கம்
























# பீல் பிராந்தியச் சமூகத்தினரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான திட்டத்தின் சுருக்கம்

பீல் பிராந்தியத்தில் உள்ள அமைப்புக்கள், தமது பகுதியின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான முதலாவது திட்டத்தை(CSWB) உருவாக்குவதற்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து ஒன்றிணைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சட்ட மாஅதிபரின் பிரதிநிதியாக இயங்கும் அமைச்சின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு திட்டமிடல் கட்டமைப்பு இந்தத் திட்டத்துக்கு வழிகாட்டுகிறது. சமூகத்தினரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு என்பது, அனைவரும் பாதுகாப்பாக இருக்கும், சமூகத்தின் ஒரு பகுதியாக அவர்களை உணரவைக்கும், அவர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை வழங்கும் மற்றும் கல்வி, ஆரோக்கியப் பராமரிப்பு, உணவு, குடியிருப்புவசதி, வருமானம் மற்றும் சமூக மற்றும் கலாச்சார வெளிப்பாட்டுக்கான தனிநபர்கள் மற்றும் குடும்பத்தவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிறைவான ஒரு சமூகத்தின் நிலையென அது வரையறுக்கிறது.

மீளமீள அமுலாக்கப்படவிருக்கும் இந்தத் திட்டத்தின் முதலாவது கட்டம் கவனம் செலுத்தவிருக்கும் விடயங்களில் **குடும்ப வன்முறை, மன ஆரோக்கியம் மற்றும் அடிமையாதல் மற்றும் அமைப்புரீதியான பாகுபாடு** ஆகியவை அடங்குகின்றன. எங்களின் சமூகத்தில் இருக்கும் இளையோர் மற்றும் குடும்பத்தவர்களின் தேவைகளை அந்த மூன்று பகுதிகளின் கீழும் இந்தத் திட்டம் ஆராய்கிறது. மீளமீள அமுலாக்கப்படவிருக்கும் இந்தத் திட்டத்தின் முதலாவது கட்டம் நான்கு ஆண்டு காலத்துக்கு ஊடாக நிகழும், அத்துடன் பீல் குடியிருப்பாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் தேவைக்கேற்ப ஆண்டுதோறும் பரிசீலிக்கப்பட்டு, பின்னர் இற்றைப்படுத்தப்படும். இந்த மூன்று பகுதிகளுக்குள்ளும் குடியிருப்பாளர்களை ஆதரிக்கவேண்டிய அவசரத்தை, COVID-19 சமூகத்தவர்களில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் வலுப்படுத்துகின்றன.

எங்களின் சமூகத்தில் நீண்டகாலத்துக்குக்கான மற்றும் தொடர்ச்சியான மேம்பாடுகளுக்கு வழிவகுக்கக் கூடிய ஒரு கூட்டுத் தொலைநோக்குப் பார்வையில் அனைத்துத் துறையினரும் ஒன்றாக இணைந்து பணியாற்றுவதற்கான ஒரு வாய்ப்பை இந்த திட்டம் வழங்குகிறது.

## தொலைநோக்கு

அனைத்துக் குடியிருப்பாளர்களும் வளமாக வாழக்கூடிய பாதுகாப்பான, உள்ளடக்கிய மற்றும் இணைக்கப்பட்ட ஒரு சமூகமாகப் பீல் அமைந்திருத்தல்.

## தொலைநோக்குக்கான செயல்திட்டம்

பாதுகாப்பு, தொடர்புற்றிருக்கும் நிலை மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான சேவைகள் மற்றும் ஆதரவுக்கான அணுகலை பீல் குடியிருப்பாளர்கள் அனைவருக்கும் உறுதிசெய்வதற்காக நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

## இந்தத் திட்டம் பின்வருவனவற்றைப் பயன்படுத்தும்:

- எங்களின் சமூகத்திலுள்ள அனைவரும் இந்தத் திட்டத்திற்கு பங்களிப்பதையும், பீல் எதிர்கொள்ளும் பிரச்சினைகளால் வெவ்வேறு மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்கான தெளிவான ஒரு பார்வையை வழங்குவதையும் ஆதரிக்கும் **ஒரு சமத்துவமான பார்வை.**
- மக்கள் பிறக்கும், வளரும், வேலைசெய்யும், வாழும் மற்றும் வயது எய்தும் நிலைமைகள் அவர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளங்கிக்கொள்வதற்கான **ஆரோக்கியத்துக்கான சமூகக் காரணிகள்.**

- சிக்கலான சமூக பிரச்சினைகளைத் தீர்க்குமொரு பொதுவான நோக்கம் மற்றும் பகிரப்பட்ட பெறுபேறுகள், நடவடிக்கையின் அளவு மற்றும் திட்டம் ஆகியவற்றுடனான முழுச் சமூகத்தினரும் தேவை என்பதை இனம்காண்பதற்கான **ஒன்றிணைந்த செயல்விளைவுக்கான ஓர் அணுகுமுறை**.
- எங்களின் உள்ளூர்ச் சமூகத்தில் உள்ள சொத்துக்கள் மற்றும் பலங்களை மதிப்பிடுவதற்கும், தேவைப்படும் இடங்களில் மற்றும் உள்ளூர்ரீதியாக அர்த்தம் தரக்கூடிய வகையில் வளங்களில் **கவனம் செலுத்துவதற்கான இடம்சார்ந்த ஓர் அணுகுமுறை**.
- தீர்வுகளை உருவாக்குவதற்கும், பீல் சமூகங்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கும் சமூகக் காரணிகளை இனம்காண்பதற்கும் **சமூக மற்றும் பொருளாதரக் காரணிகளில் கவனம்செலுத்தல்**.

## CSWB திட்டத்தின் முக்கியமான உந்துகோல்கள்

- பீலின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான மேலதிக வளங்கள்/நிதி மற்றும் சமத்துவமான கொள்கைகளுக்காக அரசாங்கத்தின் ஏனைய மட்டங்களுடன் **பரிந்துபேசுதல்**.
- குடியிருப்பாளர்கள் மற்றும் சமூகப் பங்காளிகளுடன் **தொடர்பாடல் மற்றும் தொடர்புறல்**.
- முன்னேற்றம் மற்றும் வெற்றியைக் கண்காணிப்பதற்கான **பகிரப்பட்ட அளவீடுகள் மற்றும் குறிகாட்டிகள்**.

# ஒன்றிணைந்து தொழிற்படல்

CSWB திட்டத்தினை உருவாக்குவதற்கு 400 க்கும் மேற்பட்ட தனிநபர்கள் மற்றும் அமைப்பினர் தங்களின் கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர். பீலுடன் தொடர்பான அதிக தரவுகள், மிகவும் வேறுபட்ட மற்றும் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் கவனம்செலுத்தப்படும் ஒவ்வொரு பகுதியிலும் அதிக விழிப்புணர்வைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை ஒட்டுமொத்தமான கலந்தாலோசனைகள் சுட்டிக்காட்டுகின்றன - இவை அனைத்தும் சமத்துவம் மற்றும் நிலைமைகள் முழுவதையும் காட்டும் ஒரு பார்வையாக இருக்கவேண்டும். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசரம் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற உணர்வுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஒருமித்த கருத்து பங்கேற்பாளர்களிடையே இருந்தது.

இதன் விளைவாக, எங்களின் CSWB திட்டம் பின்வருவனவற்றை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கும்:

- ஆரோக்கியம் மற்றும் சமூக அமைப்புகளில் மேம்பட்ட ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் ஒருமைப்பாடு
- அமைப்பில் உள்ள இடைவெளிகளைக் கண்காணிப்பதற்கு தகவல் பகிர்வு மற்றும் செயல்திறன் அளவீடு
- முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய அபாயங்கள் மற்றும் விலத்திவைக்கப்பட்டிருக்கும் குழுவினர் மற்றும் அண்டை அயலாரைப் பற்றிய அதிகரித்த புரிதல் மற்றும் கவனப்பாடு
- புதிய அல்லது மேம்படுத்தப்பட்ட சேவைகள் மற்றும் திட்டங்கள்

பீல் குடியிருப்பாளர்களின் வாழ்க்கையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதற்காக 25க்கும் மேற்பட்ட அமைப்பினர் எங்களின் சமூகத்தவருடன் இணைந்து பணியாற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளனர்; இவற்றில் காவல்துறை மற்றும் அவசரகால நிலை சேவைகள், பாடசாலைச் சபைகள், ஆரோக்கியம் மற்றும் சமூக சேவை வழங்குநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் ஆகியோர் அடங்குவர்; திட்டத்திற்கான கட்டமைப்பிற்கு இவர்கள் தலைமைதாங்குவதுடன் ஒவ்வொரு பகுதிக்கும் கவனம்செலுத்துவதற்குப் பொறுப்பாக இருப்பர்.

# குறிக்கோள்கள், உத்திகள் மற்றும் பெறுபேறுகள்

எந்தவொரு நிறுவனமும் இந்தப் பிரச்சினைகளைத் தனித்துச் சமாளிக்க முடியாது என்பதை திட்டத்தை உருவாக்குவதில் ஈடுபட்டவர்கள் அங்கீகரித்துள்ளனர். கவனம் செலுத்தும் பகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒன்றிணைந்து அடைவதற்கான குறிக்கோள்களையும் உத்திகளையும் அவர்கள் ஒன்றுசேர்ந்து உருவாக்கினர்.

## குடும்ப வன்முறை

### குறிக்கோள்: பீல் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கான வழிமுறைகளை உருவாக்கல் மற்றும் பலப்படுத்தல்

**உத்தி 1:** அதிக தேவைகள் உள்ள பகுதிகளையும், துன்புறுத்தலினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஏற்கனவே இருக்கும் சேவைகள் மற்றும் ஆதரவுகளின் வினைத்திறனின்மையையும் அடையாளம் காண்பதற்காக, பாதுகாப்பிற்காக பீலில் ஏற்கனவே இருக்கும் வழிமுறைகளின் அமைப்புகளை அறிதல்

**அடைவுகள்:**

- துன்புறுத்தலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள் மற்றும் ஆதரவுகளுக்கான அணுகையை மேம்படுத்தல்

**உத்தி 2:** பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான அமைப்புகள் பற்றிய தரவுச் சேகரிப்பு, மேலாண்மை மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகளை மேம்படுத்துதல்

**அடைவுகள்:**

- மேம்பட்ட தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் தரவுப் பகிர்வு
- பீலில் உள்ள சேவைபெறுநர்களையும் தேவைகளையும் பற்றிய மேம்பட்ட விளக்கம்

**உத்தி 3:** பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைக்கான ஒருங்கிணைந்த முயற்சிகளிலிருந்தும், COVID-19 உடன் தொடர்பான குடும்ப வன்முறையுடனான பதிலளிப்புப் பங்குதாரர்களிடமிருந்தும் கற்றல் மற்றும் அவர்களின் ஒருங்கிணைந்த முயற்சிகளை ஆதரித்தல்

**அடைவுகள்:**

- பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைக்கான பிரிவு முழுவதும் மேம்பட்ட கூட்டாண்மை மற்றும் ஒன்றிணைந்த வலையமைப்புகள்
- தொற்றுப்பரவல் மற்றும் மீட்சியின் போது ஆதரவுகளுக்கான மேம்பட்ட அணுகல்

### குறிக்கோள்: குடும்ப வன்முறை தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வையும் அறிவையும் அதிகரித்தல்

**உத்தி 1:** குடும்ப வன்முறை மற்றும் நெருங்கிய துணைவர் தொடர்பான அறிவு மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை உருவாக்கல்

**அடைவுகள்:**

- சமூகப் பிரச்சினையான குடும்ப வன்முறை பற்றி குடியிருப்பாளர்களிடையே அதிக விழிப்புணர்வு
- துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கக்கூடிய சேவைகள் பற்றி குடியிருப்பாளர்களிடையே அதிக விழிப்புணர்வு

## மன நலம் மற்றும் அடிமையாதல்

**குறிக்கோள்: இளையோர் மற்றும் குடும்பத்தவர்களிடையே மன ஆரோக்கியம் மற்றும் நேர்மறையான உறவுகளை மேம்படுத்தல்**

**உத்தி 1:** ஆதரவான சூழல்களை உருவாக்குவதற்கும், தொடர்புகளை உருவாக்கும் இளையோரின் திறன்களை திறன்களை வளர்ப்பதற்கும் பீலில் இருக்கும் இளையோர் முன்னெடுப்புகள் மற்றும் இளையோருக்குச் சேவை செய்யும் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுதல்.

**அடைவுகள்:**

- அதிகமான இளையோர் பாதுகாப்பை, தொடர்புபட்டிருப்பதை, சமூகத்தால் ஆதரவளிக்கப்பட்டிருப்பதை உணர்ந்திருத்தல்

**குறிக்கோள்: வழிமுறைகளை எளிதாக்குவதன் மூலமும் முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் மூலமும் இளையோருக்கான மனநலம் மற்றும் அடிமையாதல் (MHA) சேவைகள் மற்றும் ஆதாரவுகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்**

**உத்தி 1:** மன ஆரோக்கியம் மற்றும் அடிமையாதல் தொடர்பான ஆதரவுகள் தேவைப்படும் இளையோருக்கான பராமரிப்பு வழிமுறைகளை மாற்றல்

**அடைவுகள்:**

- MHA சேவைகள் மற்றும் ஆதரவுகளுக்கான அமைப்புகளுக்கு மேம்பட்ட வழிகாட்டல்
- இளையோருக்கான MHA சேவைகள் மற்றும் ஆதரவுகளுக்கான மேம்பட்ட அணுகல்

**உத்தி 2:** நெருக்கடி சூழ்நிலைகளுக்கான ஆபத்தைத் தணிப்பதற்காக பீலில் சூழ்நிலைகளுக்கேற்ற உத்தி/உத்திகளை உருவாக்குதல்

**அடைவுகள்:**

- தீவிரமாக அதிகரித்திருக்கும் ஆபத்துகளுக்கான சூழ்நிலைகளின் அளவு குறைக்கப்பட்டிருத்தல்

## அமைப்புரீதியான பாகுபாடு

**குறிக்கோள்: பீலில் ஒடுக்குமுறை எதிர்ப்பு மற்றும் சமத்துவமான நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை வெளிப்படையாகப் பரிசீலித்தல், உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்**

**உத்தி 1:** அமைப்புரீதியான தலைமைத்துவ அணியின் பங்காளர்களிடையே பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்துக்கான உறுதிப்பாட்டை மீளவும் உறுதிப்படுத்தல்

**அடைவுகள்:**

- பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்துக்கான உறுதிப்பாட்டை அமைப்புரீதியான தலைமைத்துவ அணியினர் மீளவும் உறுதிப்படுத்தியிருப்பர்

**உத்தி 2:** சிரேஷ்ட தலைமைத்துவத்தினரிடையே ஒடுக்குமுறை எதிர்ப்பு மற்றும் சமத்துவம் பற்றிய புரிந்துணர்வையும் விழிப்புணர்வையும் உருவாக்கல்

**அடைவுகள்:**

- அமைப்புரீதியான பாகுபாடு மற்றும் அமைப்புரீதியான இனவெறி பற்றிய அதிக புரிதல்
- நிறுவனங்கள் பின்பற்றக்கூடிய ஒடுக்குமுறை எதிர்ப்பு மற்றும் சமத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய அதிக புரிதல்

**உத்தி 3:** சமத்துவம் மற்றும் உள்ளடக்கும் அமைப்புரீதியான திறனைக் கட்டியெழுப்பல் மற்றும் முன்னேற்றம் குறித்து வெளிப்படையாக அறிக்கையிடல்

**அடைவுகள்:**

- சமத்துவத்துக்கான மதிப்பீட்டின் அடிப்படையை நிறைவுசெய்யும் அமைப்புரீதியான தலைமை அணி அமைப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பு
- முன்னேற்றம் குறித்து ஆண்டுதோறும் அறிக்கைசெய்யும் அமைப்புரீதியான தலைமை அணி அமைப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பு
- சமத்துவம் மற்றும் உள்ளடக்கலை மேம்படுத்தும் மேம்படுத்தப்பட்ட நிறுவனக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

**உத்தி 4:** சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான திட்டத்தின் நடவடிக்கைகளை வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துவதில் நேரடி அனுபவமுள்ள நபர்களை அர்த்தமுள்ள முறையில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான ஒரு மூலோபாயத்தைச் செயல்படுத்துதல்

**அடைவுகள்:**

- CSWB திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலின் வெவ்வேறு மட்டங்களில் நேரடி அனுபவமுள்ள நபர்கள் அர்த்தமுள்ள முறையில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள்

**குறிக்கோள்: பாதிப்பை மதிப்பிடுவதற்கும் ஏற்றத்தாழ்வுகள் வெளிப்படும்போது பதிலளிப்பதற்குமான வினைத்திறனான தரவுச் சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகளைச் செயல்படுத்துதல்**

**உத்தி 1**: அமைப்புரீதியான தலைமை அணி அமைப்புகளின் ஒரு குழுவினருடன் சமூகரீதியான குடிசார் தரவுகளை முதன்முதலாகச் சேகரித்தல் மற்றும் தரவுப் பகிர்வு வழிமுறைகளை உருவாக்குதல்

**அடைவுகள்**:

- சமூகவியல் தரவுகளைச் சேகரிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு
- சமூக நிறுவனங்களிடையே மேம்பட்ட தரவுப் பகிர்வு மற்றும் பொது வரைவிலக்கணங்கள்
- கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தெரிவிப்பதற்காகப் பீலில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் பற்றிய மேம்பட்ட புரிதல்

# அடுத்தநிலைச் செயல்படிகள்

பீலில் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்து செயல்படுவதற்கான கட்டமைப்பு மற்றும் அணுகுமுறை ஒன்றை பீலின் CSWB திட்டம் ஸ்தாபிக்கிறது. இப்போதும் எதிர்காலத்திலும், சமூகத்தின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு இந்தத் திட்டம் பொறுப்பாகவிருக்கும். 2024 வரைக்கும், பின்னர் அதற்கு அப்பாலும், எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் அதில் ஈடுபடுவதற்குமான வாய்ப்புகள் சமூகத்தவர்களுக்குத் தொடர்ந்திருத்தல் என்பது இந்தத் திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாக இருக்கும்.

அனைத்துக் குடியிருப்பாளர்களினதும் வாழ்க்கை வளமாக இருப்பதற்கு, பீல் பிராந்தியத்தை பாதுகாப்பான, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் தொடர்புபட்ட ஒரு சமூகமாக மாற்றுவதில் எங்கள் அனைவருக்கும் பங்குள்ளது. தொடர்ச்சியான திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் ஈடுபாட்டின் மூலம்,நாங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு வித்தியாசத்தை உருவாக்குவோம்.

**peelregion.ca/community-safety-wellbeing-plan**

பீல் சமூகத்தினரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான திட்டம் 2020-2024

**peelregion.ca/community-safety-wellbeing-plan**